# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி 1969






1991 மார்ச்



விலை: 4/50

வீழ்ந்த மானுடத்தின் விலங்கொடித்து
சூழ்ந்த துயர்களைய உயிர்த்தெழுந்தார்

# தொண்டன்



மார்ச் - 1991

மலர்: 23 இதழ்: 01

ஆசிரியர்;
கிங்ஸ்லி றெபட்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு:
எஸ். லோகநாதன்
பி. ஜோசப்

வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு./ மட். மறை மாவட்டம்

தொடர்பு:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை:
தனிப்பிரதி ரூபா:- 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 70/-

## உள்ளே.........

1) எமது குரல் ... 1
2) உன் பெயரால் ... 2
3) உயிர்ப்பில் மலரும் ... 3
4) எப்படிப் பேச வேண்டும் ... 5
5) புகழ் பூத்த ... 6
6) உயிர்ப்புக் கொள்வீர் ... 8
7) அரச சார்பற்ற ... 9
8 மாணவர் பக்கம் ...11
9) உயிர்ப்பின் இரகசியம் ...13
10) பாதை கொஞ்சம் ...15
11) இளைஞர் அரங்கம் ...17
12) சிறுகதை ...18
13) விவிலியப் புதிர் ...19
14) முடிவுகள் ...20

தொண்டன் வாசகர்கள், எழுத்தாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் நமதாண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

— நிர்வாகம் —

# எமது குரல்

வாசக நேயர்களே!

இறை இயேசுவின் உயிர்ப்புவிழா வாழ்த்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு இரண்டுவகையில் எம்மை சிந்திக்க அழைக்கின்றது.

ஒன்று அவருடைய பாடுகளும் மரணமும்; இவ்வுலக சோதனைகளும் வேதனைகளும் இயேசுவைக் கூட விட்டுவைக்கவில்லை. இவைகளின் கோரப்பிடி அவருடைய வாழ்வையும் ஒரு கணம் ஆட்டிப்படைக்க முனைந்தது. ஆயினும் இயேசு வெற்றியுடன் தலைநிமிர்ந்து நடைபயின்றார். இன்று நாம் அனுபவிக்கும் சோதனைகளும் வேதனைகளும் எம்மை சாகடிக்கும் அளவுக்கு கொடியனவாய் இருப்பதை ஒருவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இவைகளுக்கு ஒரு முடிவுரை எழுதப்படாதா என்ற ஏக்கம் எம் உள்ளங்களை வாட்டிக்கொண்டே இருக்கின்றது. இதன் முடிவுக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு ஏதாவது பங்களிக்கின்றதா? ஒரு நம்பிக்கையையாவது எமதுள்ளத்தில் ஏற்றுகின்றதா? சிந்தியுங்கள்.

இரண்டாவது, உயிர்த்த கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த கிறிஸ்துவைப் போலல்லாது ஒரு புதிய தோற்றத்தில் புதிய பாணியில் மகிமையான முறையில் செயல்படுகின்றார். எனவே கிறிஸ்துவோடு உயிர்த்தெழுந்து நாமும் புதிய தோற்றத்தில், புதிய பாணியில் செயல்படுவது அவசியமான தொன்றல்லவா? எமது பழைய சிந்தனைகள், மனப்பான்மைகள், உறவுமுறைகள் எல்லாம் மாற்றமடைய வேண்டும். மாறிய வாழ்வு புதியதோர் கண்ணோட்டத்துடன், செயல்பட வேண்டும். நாம் உயிர்த்தெழுந்து புதிய வாழ்வை அமைப்பதுபோல மற்றவர்களுடைய வாழ்விலும் உயிர்ப்பு நடைபெற நாம் கருவிகளாக அமைய வேண்டும். எம்மால் இதை சாதிக்கமுடியுமா? நாம் ஒருபடி சென்றால் இறைவன் மூன்றுபடி எம்மோடு செல்ல ஆயத்தமாயிருக்கிறார். உங்கள் பதில் என்ன? சிந்தித்து செயல்பட இறையாசீர்.

கிங்ஸ்லி றெபேர்ட்.





கிறிஸ்துவோடு நீங்கள் உயிர்த்தெழுந்தவர்களாயின் மேல் உலகில் உள்ளவற்றை நாடுங்கள்.

கொலோ 3/1

# உன் பெயரால் உயிர்ப்போம்

மரணத்தை வென்றவனே! மன்னவனே அன்புருவே!
தரணி உய்யப் பிறந்தவனே, தாவீதரசன் குலக் கொழுந்தே
கருணையுடன் அவதரித்தாய்! காத்திடவே மெய்யறத்தை
அரண் எமக்குன் திருவருளே அறிவெல்லாம் அமர்ந்தவனே.




நலத்தினைப் பழகிக் காட்டி நன்னெறித் தவத்தில் ஓங்கி
நலத்தினை மாந்தர் உய்ய நவின்றனை அன்பினாலே
நலத்தினை அறியா மாக்கள் நவிலருங் கொடுமை செய்ய
நலத்தினை அறியக் காட்ட நல்கினை பலியாய் உன்னை.

உன்பெயராலே இந்த உலகினில் உயிர்ப்போம்! நாங்கள்
உன்பெயராலே உண்போம், உன் அருள் சிறக்க வாழ்வோம்
உன்பெயராலே எங்கும் உத்தமத் தொண்டு செய்வோம்
உன்பணித் திறத்திற்கெங்கள் உழைப்பெல்லாம் ஈந்து வாழ்வோம்.

— சுத்தானந்த பாரதி —

# உயிர்ப்பில் மலரும் புதிய சமுதாயம்

உலக வரலாற்றிலே மனிதர்கள் பலர் இடம் பெற்றுள்ளனர். சாதனைகள் பல புரிந்துள்ளனர். ஆனால் அனைவரும் இறந்து விட்டனர். ஒரே ஒருவர் மட்டும் மனித வரலாற்றிலே விதி விலக்கானார். மனிதன் மண்ணில் பிறக்கிறான், பிறந்தவன் வாழத்துடிக்கிறான், துடிக்கிறவன் சாக மறுக்கிறான். இயேசு மண்ணில் பிறந்தார், பிறந்தவர் வாழ மறுத்தார், மறுத்தவர், சாகத் துடித்தார். உலகில் சாக வேண்டும் என்பதற்காகவே பிறந்த ஒருவர் யார் எனில் அது இயேசு பெருமான் தான். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய அது அப்படியே இருக்கும். மடிந்தால் தான் மிகுந்த பலன் அளிக்கும் என்றும், மோயிசன் பாலை வனத்தில் பாம்பை உயர்த்தியது போல மனுமகனும் உயர்த்தப்பட வேண்டும் என்றெல்லாம் தாம் எவ்வாறு சாவதற்காகவும் அதன் மூலம் மற்றவர்கள் வாழ்வு பெறுவதற்காகவும் வந்தார், என இயம்பினார், அவரது வார்த்தைகள் பொய்க்கவில்லை. அவர் இறந்தார் ஆனால் மூன்றாம் நாள் உயிர்த்து ஒரு புதிய சமுதாயத்தை படைக்க வழி வகுத்து விட்டார். வாழ்வின் விளிம்பிற்கு தள்ளப்பட்ட மனிதருக்கு நம்பிக்கையும் புது வாழ்வையும் புத்துணர்ச்சியையும் கொடுக்க இயேசு உயிர்த்து விட்டார். அவரது உயிர்ப்பில் ஒரு புதிய சமுதாயம் உருவாகியது. அநீதி அழிந்து நீதி தழைத்தது. பகைமை ஒழிந்தது. அன்பு பிறந்தது. வேற்றுமை செத்து ஒற்றுமை மலர்ந்தது. குழப்பம் இறந்து அமைதி உயிர்த்து புதிய சமுதாயம் ஒன்று படைக்கப்பட்டது.



கிருஸ்துவின் உயிர்ப்பால் அன்றி நாம் கிறிஸ்தவர்கள் என்ற சலுகையை பெற்றிருக்க முடியாது. உயர்ந்த கிறிஸ்து இன்றி திருச்சபையில்லை. இயேசுவின் உயிர்ப்பினால் அவர் ஆண்டவர் என வெளிப்படுத்தப்பட்டார். இறைமகன் தம்மோடு இணைக்கப்பட்ட மனித இயல்பில் இறந்து, உயிர்த்து, சாவை வென்று, மனிதனை மீட்டார். மனிதனை ஒரு புதுப் படைப்பாக உருமாற்றினார். ஆனால் நம் பெற்றோரோ உற்றார் உறவினர் நண்பர்களில் யாராவது இறந்து விட்டால் நாம் மீளாத் துயரில் ஆழ்ந்து விடுகின்றோம். நம் இறப்பைப் பற்றி எண்ணும் போது சாவோடு நம் கதையும் முடிந்து விடும் இனி அவ்வளவுதான் என்று பயந்துவிடும் நமக்கு புனித சின்னப்பரின் வார்த்தைகள் நம்பிக்கை ஊட்டுகின்றன. நமக்கும் உயிர்ப்பு உண்டு நம் உயிர்ப்பின் வழிகாட்டி யேசுவே, இறந்தோரிடமிருந்து கிறிஸ்து உயிர்த்து எழுந்தார். துஞ்சினோரின் முதற்கனி அவரே மனிதன் வழியாய் சாவு உண்டானது. போல் மனிதன் வழியாகவே இறந்தோருக்கு உயிர்த்தெழுதலும் உண்டு ஆதாமில் அனைவரும் இறந்தது போல் கிருஸ்துவில் அனைவரும் உயிர் பெறுவர் என்று நமக்கு நம்பிக்கையூட்டுகிறார் சின்னப்பர். கிறிஸ்துவின் உயிர்ப்பில் ஒரு புதிய விடியல் மலர்கிறது. ஆனால் இறையரசுப் பணியை காற்றில் பறக்க விட்டு தங்களது சுய நலன்களை

தேடுவோர், அர்ப்பணத்தை முற்று முழுதாக மறந்து, ஏழை எளிய மக்கள் மீது இரக்கமின்றி வாழ்வோர், ஆழ்ந்த விசுவாச உணர்வு இன்றி திருச்சபைப் பணிகளில் ஈடுபாடின்றி பெயர் அளவிற்கு கிறிஸ்தவர்களாக வலம் வரும் நாம் அனைவரும், இன்னும் உயிர்க்கவில்லை. இயேசுவின் உயிர்ப்பை உணரவில்லை. நாம் இயேசுவின் உயிர்ப்பை உணர்ந்து விசுவாசத்தில் நிலைத்தோம் என்றால், ஒவ்வொரு விடியலும் நம்பிக்கையூட்டும். அன்பு, அமைதி, நீதி, நிலவும் விடியலாக அமையும் போது, மனிதனை மனிதனாக, மனித உயிர்களை மதிக்கும் சமுதாயம் உருவாக முடியும். சுய நலம், வஞ்சகம், வன்மை, பொறாமை, ஊழல், ஏமாற்றல், அநீதச் செயல் போன்ற இருட்டறைகளிலிருந்து ஒவ்வொருவரும் விடு பட்டு வந்தால் தான் நமக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு அர்த்தம் உள்ளதாக உண்மையானதாக அமையும்.

கிறிஸ்து உலகிலே வாழ்ந்த போது அவரை உறுதியாக எவருமே ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அவருடைய போதனைகளைக் கேட்டும் புதுமைகளைக் கண்டும் வியந்த மக்களில் பலர் இயேசுவைப் பின் தொடர்ந்தனர். ஆயினும் அவர்கள் உறுதி பெறவில்லை. ஓசான்னா பாடிய கூட்டம், ஒழிக! ஒழிக! சிலுவையில் அறையும்! என்று கத்தியது. கிறிஸ்து பிடிபட்டதும், பயந்து ஓடி ஒழிந்த அப்போஸ்தலர்கள் அவர் உயிர்த்த செய்தி கேட்டதும் துணிவோடு கல்லறைக்கு ஓடுகிறார்கள். கிறிஸ்துவின் உயிர்ப்பே அப்போஸ்தலர்களுக்கு அவரது வார்த்தையிலும், வாழ்க்கையிலும் உறுதி ஊட்டியது. கிறிஸ்து உயிர்த்ததும் தம் சீடருக்குத் தோன்றினார். தம்மை விட்டு ஓடிய அவர்களை ஏளனத்துடன் நோக்கவில்லை. சுய நலத்திலும், சாத்தான் பிடியிலும் சிக்கிய அவர்களை, தம்மைக் காட்டிக் கொடுத்த, தனியே விட்டு விட்டு ஓடிய, அவர்களைக் கடிந்து கொள்ளவில்லை. தனது அகோரப்பார்வையை அவர்கள் மேல் செலுத்தவில்லை. சீடர்கள் இயேசுவைக் கண்டு வெட்கப்படும் அளவிற்கு அவர் நடக்கவில்லை. காரணம் யேசு அறிவார், மனித பல வீனங்களினால் சீடர்கள் அலைக் களிக்கப் பட்டதை. தந்தை தனக்குக் கொடுத்த அனைத்துப் பொறுப்புக்களையும் தன் சீடர்களுக்கு அளித்தார். இயேசு பரிசுத்த ஆவியால் நிரப்பப் பட்டு எளியோருக்கு நற்செய்தி அறிவித்தார். சிறைப் பட்டோருக்கு விடுதலை அளித்தார். குருடர்களுக்குப் பார்வையளித்தார். ஒடுக்கப் பட்டோருக்கு உரிமை வாழ்வினை வழங்கினார். ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை அறிவித்தார். தனது இப்பணியை தொடர்ந்து ஆற்ற தம்மைப் போன்ற விடுதலை அளிக்கும் வீரராகப் பணியாற்ற சீடர்களை அனுப்பினார். கிறிஸ்து தனது மகிமைக்காக உயிர்க்கவில்லை. மாறாக நம் அனைவரது நல் வாழ்வுக்காகவும் உயிர்த்தார்.

இறைவன் தன்னையே வெறுமையாக்கி சாவை ஏற்று உயிர்த்த போது நாம் ஏன் தீய எண்ணங்கள், தீய சிந்தனைகளிலிருந்து தீய செயல்களிலிருந்து உயிர்த்து வரக் கூடாது? ஏன் பிறருக்காக வாழக் கூடாது? உலகிலே, நம் நாட்டிலே, திருச்சபையிலே, குடும்பங்களிலே ஏன் நம் ஒவ்வொருவரது உள்ளத்திலும் மலிந்து வேர் விட்டு வளர்ந்து கொண்டிருக்கும் களைகளை வேரோடு பிடுங்கி எறிய ஒவ்வொருவரும் முற்படும் போது தான், உயிர்ப்பின் வழியாக நிலை நாட்ட வந்த இயேசுவின் அன்பு நிறைந்த புதிய சமுதாயம் உருவாகும். உயர்த்த யேசுவில் நாம் அனைவரும் மகிழவும் முடியும்.

★ அருட்திரு இக்னேஸ் யோசப்

---

தெரியுமா?

வீனஸ் கிரகத்துக்கு ஏன் இந்தப் பெயர் வந்தது தெரியுமா? சூரிய குடும்பத்தில் மிகமிக அழகாக ஒளிவீசித் திகழ்வதால் ரோமானிய அழகுத் தெய்வத்தின் பெயரான வீனஸ் என்ற பெயரைத்தான் கிரகத்துக்குச் சூட்டப்பட்டது.

# எப்படிப் பேசவேண்டும் ?

நாம் ஒருவரிடம் பேசும்போது அதிகக் கவனத்துடன் பேசவேண்டும். ஒரு சொல் வெல்லும்; ஒரு சொல் கொல்லும்.

அவசரப்பட்டு எந்த விஷயத்தையும் எவரிடமும் பேசலாகாது. அவசரத்தில் வாக்கியங்கள் முழுவடிவம் பெறுவதில்லை. தகுந்த சொற்களும் அவசரத்தில் கிடைக்காமல் திணறுவோம்.

ஆசுவாசப்படுத்திக் கொண்டு நிதானம் அடைந்த பிறகே நாம் ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும்.

பரபரப்புடன் படபடப்பாகப் பேசும்போது செய்தியைத் தாறுமாறு ஆக்கிவிடுவோம். அத்துடன் பல்வேறு பகையையும் சம்பாதித்துக் கொள்கிறோம்.

அவசரத்தில் கொட்டிய அலங்கோலமான வார்த்தைகளை நிதானமான பிறகு சரிசெய்து விட முடியாது.

நாம் பிறரைச் சந்தேகப்படும்பொழுதோ, பிறர் மீது ஆத்திரப்படும் பொழுதோ மௌனம் சாதிப்பது நல்லது ஆத்திரம் அறிவிற்குச் சத்துரு.

உணர்ச்சிகள் விழித்தெழுந்து உலாவரும் பொழுது அறிவு கண்ணை மூடிக்கொண்டு கட்டிலில் தூங்கி விடுகிறது

இன்றைக்கு வாழ்வில் முன்னேறியவர்கள் எல்லாம் ஆத்திரத்தை அடக்கி ஆண்டவர்கள்; பொறுமையைக் கடைப்பிடித்தவர்கள். உணர்ச்சி வசப்பட்டு இடந்தெரியாமல் உளறிக் கொட்டியவர்கள் எல்லாம் உருப்படாமல் போய் விட்டார்கள்;

எந்த விஷயத்தைப் பேசுகிறோம் என்பதில் செலுத்தும் கவனம் யாரிடம் பேசுகிறோம் என்பதிலும் செலுத்த வேண்டும். எல்லாரிடமும் ஒரே மாதிரித்தான் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

# எந்தப் பக்கம்

மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் ஒரு பள்ளி நடத்தி வந்தார். ஒரு நாள் அவர்தம் குருநாதர் கோகலே பள்ளியைக் காண வந்தார். கோகலே மாணவர்களை நோக்கி ஒரு வினா தொடுத்தார்.

குழந்தைகளே! நீங்கள் உங்கள் தாய் தந்தையுடன் ஒரு காட்டு வழியே சென்று கொண்டிருக்கிறீர்கள்' உங்கள் வலப்புறம் நாலடி தூரத்தில் தந்தை, இடப்புறம் நாலடி தூரத்தில் தாய். திடீரென்று எதிரே நாலடி தூரத்தில் ஒரு சிங்கம் பாய்ந்து வருகிறது. நீங்கள் யாரைக் காப்பாற்ற முயல்வீர்கள்? தந்தையைக் காப்பற்றினல் தாயை இழக்க நேரிடும். தாயைக் காப்பாற்றினல் தந்தையை இழக்க வேண்டும். எந்த மாணவனும் பதில் கூறவில்லை. கோகலே, காந்தியை நோக்கினர். உடனே காந்தி கூறினர். இரு புறமும் சாயமாட்டேன். நேரே ஓடி சிங்கத்துக்கு நானே இரையாகி என் பெற்றோரைக் காத்திடுவேன்.

— நூல் காந்திஜீ வரலாறு —

## வித்தியாசமான மூளை

விஞ்ஞானி ஐன்ஸ்டீன் 1955ம் ஆண்டு அமெரிக்காவில் நியூஜெர்சி என்ற இடத்தில் இறந்தார். அவர் மூளை மட்டும் தனியாக எடுத்து வைக்கப்பட்டது. ஆனல் அது காணாமல் போய் விட்டது. உடனிருந்த விஞ்ஞானிகளிடம் சோதனை செய்தபோது கன்ஸான் நகரில் வசித்த டாக்டர் ஹார்வே என்பவரிடம் மூளை பாதுகாப்பாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. 23 ஆண்டுகளுக்குப் பின்பே மூளை கிடைத்தது. அதனைக் கலிபோர்ணியா பல்கலைக்கழகத்தின் மரியான் டைமண்ட் என்ற பெண்மணி பரிசோதனை செய்தாள். அவள் கண்டு பிடித்தது, சாதாரண மனித மூளையை விட அறிவு சம்பந்தப்பட்ட செயல்கள் 73சதவீதம் இதில் முகுதியாகக் காணப்படுகின்றது.

# புகழ் பூத்த புனித வியாழன்

● அருள்திரு பி. ஜோசப்

'உறவு என்றொரு சொல்லிருந்தால்
பிரிவு என்றொரு பொருளிருக்கும்' என்று பாடினார் கவிஞர். அமாவாசையும், பௌர்ணமியும் போன்று உறவும் பிரிவும்' மனித வாழ்வில் மாறி மாறி வரத்தான் செய்யும். இயேசுவையும் அவரது சீடர்களையும் பொறுத்த மட்டில் புனித வியாழன் அமாவாசை. இயேசு தனது வாழ்வின் இறுதிக் கட்டம் நெருங்கி விட்டதை உணர்கின்றார். தன் பிரிவின் வேதனையை சீடர்கள் சற்று மறந்திருக்க வேண்டும் என்பதற்காகவும், தனது வாழ்வில் சீடர்களுடன் கழிக்கப் போகும் இந்த இறுதி நாளை அவர்கள் என்றுமே மறவாதிருக்க வேண்டும் என்பதற்காகவும் பிரியாவிடை விருந்து ஒன்றை ஏற்பாடு செய்கின்றார். விருந்து எப்போதும் மகிழ்ச்சியைத்தரும் நிகழ்ச்சியாகும்.

இயேசுவின் பிரியாவிடை விருந்து பாஸ்கா விருந்தாக அமைந்தது. இயேசு தமது பிரியாவிடை விருந்தாக பாஸ்கா விருந்தைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஒரு காரணம் இருந்தது யூத மக்கள் எகிப்தின் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றதன் நினைவாக ஒவ்வொரு வருடமும் பாஸ்கா விழாவைக் கொண்டாடியது போன்று, தன் சீடர்களும் அவரது மீட்புச் செயலை, அதாவது பாடுகள், இறப்பு, உயிர்ப்பு நிகழ்ச்சி மூலம் பாவத்தின் அடிமைத் தளையிலிருந்து மக்களை மீட்டதன் நினைவாக அமைய வேண்டும் என அவர் விரும்பினார். இனிமேல் அவர்கள் நினைவுகூர வேண்டியது பழைய பாஸ்காவையல்ல. மாறாக புதிய பாஸ்காவாகிய அவரது இறப்பு உயிர்ப்பு நிகழ்ச்சியைத்தான்.

இத்தினம் புனித வியாழன், பெரிய வியாழன், ஆண்டவரின் இராவுணவு வியாழன் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் அதன் முக்கியத்துவத்தை எப்பெயருமே வெளிக் கொணர வில்லை என்றே கூற வேண்டும். ஆங்கிலத்தில் 'Maundy Thursday' என அழைக்கபடுகிறது. 'Maundy' என்ற சொல் 'Mandatum' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து தோன்றியது. 'Mandatum' என்பது 'கட்டளை' என்று பொருள்படும். ஆயின் கிறிஸ்து தாம் பாடுபடுவதற்கு முந்திய நாள் 'ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்' என்ற அன்புக் கட்டளையைக் கொடுத்த தினத்தை 'Maundy Thursday' என அழைப்பது பொருத்தமானதொன்றாகும்.



இத்தினத்தை, அன்பின் வியாழன்' என அழைப்பது மேலும் பொருத்தமானது. ஏனெனில் உறவின் அடிப்படை, அச்சாரம், ஆணிவேர் அன்பாகும். அன்பு என்ற மூன்று எழுத்திலே இந்த உலகமே உருண்டு கொண்டிருக்கின்றது என்றால் அது மிகையாகாது. அன்பு என்ற வார்த்தை எந்தளவுக்கு ஆழமான பொருளுடையதோ, அதேபோன்று இத்தினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ஆழமான பொருளுடையவையாக அமைந்துள்ளன.

அன்பின் கட்டளையைக் கொடுத்த தினம்.
அன்பின் மாதிரியைக் காட்டிய தினம்.
அன்பில் நிலைத்திருக்க மன்றாடிய தினம்.
அன்பின் அருட்சாதனத்தை ஏற்படுத்திய தினம்.
அன்பு புறக்கணிக்கப்பட்ட தினம்,

என இத்தினத்தின் முக்கியத்துவத்தை விதைந்துரைக்கலாம்.

சீடர்கள் இயேசுவின் பிரிவை எண்ணிக் கலக்கம் கொண்டிருக்கும் அவ்வேளையில் இயேசுவின் உள்ளத்திலும் துயரம் நிரம்பி

யிருந்தது. அவரது துயரத்தின் காரணத்தை நற்செய்தியாளர் தெளிவாக எடுத்துரைக்க வில்லை. ஆனால் சங்கீத ஆசிரியர் படம் பிடித்துக் காட்டும் நண்பனொருவனால் ஏமாற்றப் பட்டவனின் துயரநிலை இச்சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.

'என் எதிரி என்னை நிந்தித்திருந்தால்
அதைப் பொறுத்துக் கொண்டிருப்பேன்.
என்னைப் பகைத்தவன் எனக்கு எதிராய்க்
கிளர்ந்து எழுந்தால்
அவனிடமிருந்து தப்பியோடி ஒளிந்திருப்பேன்.
ஆனால் என் தோழன் நீயே,
என் நண்பனும், உயிர்த் தோழனுமான நீயே
என்னை எதிர்த்தாய்' (சங். 55/12 - 14)

'நான் நம்பியிருந்த நண்பன்
என்னோடு உணவு கொண்ட
அந்த நண்பனும் கூட
என்னை மிதிக்கக் காலைத்
தூக்குகின்றான்' (சங். 40 / 9)

இவ்வார்த்தைகளை ஆழமாகத் தியானித்தால் இயேசுவின் உள்ளத்தில் நிலவிய துயரத்தை ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

பிரிவு தவிர்க்க முடியாததொன்று. ஆயினும் பிரிவினால் எழும் துயரை மறக்க ஒரு மாற்றுவழி ஒற்றுமை என்பதை வலியுறுத்தி 'தந்தையே நாம் ஒன்றாய் இருப்பது போல் நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களும் ஒன்றாயிருக்கும்படி உமது பெயரால் அவர்களைக் காத்தருளும்' என அவர்களின் ஒற்றுமைக்காக மன்றாடுகின்றார். ஒற்றுமையாக இருந்தால்தான் அவர்கள் மத்தியில் தாம் இருப்பதை, அதாவது தமது பிரசன்னத்தை அவர்கள் உணர முடியும் என்று உறுதியளிக்கின்றார்.

ஒற்றுமையாக இருப்பதற்கு ஒரேயொரு வழி ஒருவரையொருவர் அன்பு செய்வதாகும் என்பதை வலியுறுத்தி அன்புக் கட்டளையையும் கொடுக்கின்றார். ஒருவர் மீதொருவர் காட்ட வேண்டிய அன்புக்கு மாதிரியாக அவர்களுடைய பாதங்களைக் கழுவுகின்றார். அடிமைகளும் பணியாட்களும்தான் பிறருடைய பாதங்களைக் கழுவுவர். ஆனால் இங்கு இயேசு அடிமையைப் போன்று தன் சீடரின் பாதங்களைக் கழுவுவதன் மூலம் அன்பின் வெளிப்பாடு பணியில் நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதை செய்து காட்டுகின்றார்.

அன்பின் வெளிப்பாடு பணியாயின், பணியின் உச்சக்கட்டம் ஒருவர் தன்னையே முற்றாக முழுமையாக பிறருக்கு கொடுப்பது என்பதை ஓர் இறைவாக்கு செயல் மூலம் நிறைவேற்றிக் காட்டுகின்றார். 'அன்புக்கு மாதிரியாக உங்கள் பாதங்களைக் கழுவினேன். அன்புப் பரிசாக எனது உடலையும், இரத்தத்தையும் நாளை நிகழப்போகும் கொடூர மரணத்தின் மூலம் உங்களுக்குக் கையளிக்கப் போகின்றேன். அதன் முன்னடையாளமான இந்த அப்பத்தை வாங்கி உண்ணுங்கள்' என்கின்றார்.

அப்பத்தைப் பிட்டுக் கொடுப்பது பாஸ்கா உணவின் ஒரு அம்சமாக இருந்தது. ஆனால் அப்பத்தை எடுத்து 'இது என்னுடைய உடல்' என்று கூறியது புதியதாக அமைந்தது. அப்பத்தை உடைப்பது அவரது உடலை உடைப்பதை அவரது மரணத்தைக் குறித்து நின்றது.

இரசத்தை எடுத்து 'பலருக்காக சிந்தப் படும் என இரத்தம்' என்று கூறியது அவரது மரணத்தின் கொடூரத்தை உணர்த்தினாலும் அவரது மரணத்தின் காரணத்தையும், அதாவது அவர் ஏன் இறக்கப் போகின்றார் என்பதையும் சுட்டி நின்றது. 600 ஆண்டுகளுக்கு முன்பாக எரேமியாஸ் இறைவாக்கினர் முன்னுரைத்த புதிய உடன்படிக்கை நிறைவேறப் போகின்றது என்று எடுத்தியம்பியது. பழைய உடன்படிக்கை செம்மறியின் இரத்தத்தினால் உறுதிப்படுத்தப்பட்டது போன்று புதிய உடன்படிக்கை இயேசுவின் இரத்தத்தினால் முத்திரையிடப்படுகின்றது.

இவ்விதமாக இயேசு பழைய பாஸ்காவை புதிய பாஸ்காவாக, பழைய விடுதலையை புதிய விடுதலையாக, பழைய உடன்படிக்கையை புதிய உடன்படிக்கையாக மாற்றுகின்றார். இவையாவும் அவரது பாடுகள், இறப்பு உயிர்ப்பு நிகழ்ச்சி மூலம் நிறைவேறப் போகின்றது என்பதை ஓர் இறைவாக்கு செயல் மூலம் எண்பிக்கின்றார். வேறொரு விதத்தில் கூறப் புகுந்தால் அவரது இறப்பும் உயிர்ப்பும் இறுதி இரவுணவில் பொதிந்திருந்தது,

இயேசுவின் இறுதி இரவுணவு வெளித் தோற்றத்திற்கு அமாவாசை போன்றிருப்பினும் வரப்போகும் உயிர்ப்பு எனும் பௌர்ணமிக்கு வழிகோலியது என்று கூறினால் சாலப் பொருந்தும்.

# உயிர்ப்புக் கொள்வீர் !

மன்பதையின் மீட்புக்காய் உயிரை ஈந்து
மரணத்தால் மானிடர்க்கு வாழ்வை ஈந்து
துன்பத்துள் சுகங்காணும் நிலையைத் தந்த
சுதன் ஏசு புனிதமுடன் உயிர்பெற்றாரே !

அடிமையிருள் அகற்ற வந்த ஒளியின் கீற்று
அகிலத்தார் அசதியினை விலக்கும் காற்று
மிடிமைதனைத் தொலைக்க வந்த விளைவு நாற்று
மேன்மை திகழ் இறைமைந்தன் உயிர்பெற்றாரே!

புனிதமகன் உயிர் பெற்ற நாளை வையம்
போற்றி மிகப் பொலிவோடு துதிகள் செய்யும்
மனித நிலை பிறழாது வாழ்ந்து உய்யும்
வழியென்றால் நாம் நமக்குள் உயிர்த்தல் வேண்டும்!

உலகமெல்லாம் போரென்னும் கொடு நெருப்பு
உணர்வீரா இவைக்கெல்லாம் எது பெறுப்பு?
விலகாது நமக்குள்ளே அன்பின் ஊற்று
விளைந்திட்டால் உயிர்ப்புண்டு துயரம் ஏது?

அகதிகளாய் அகிலத்தில் மக்கள் கூட்டம்
அலைகின்ற காட்சியெலாம் எதனைக் காட்டும்
சகலருமே சமமென்னும் மனித நீதி
சாய்ந்ததனால் வந்த வினை ; உயிர்ப்பு வேண்டும்!

உள்ளத்தால் உயர்வதுதான் உயிர்ப்புக் கண்டீர்
உலக மறைப் பொருள் யாவும் இதுவே கண்டீர்
பள்ளமெனும் பாவத்துள் அமிழ்ந்து வேகும்
பரிதாபம் நீங்கிவிட உயிர்ப்புக் கொள்வீர்?

✶ நிலா தமிழின் தாசன்

# அரச சார்பற்ற நிறுவனங்களும் மனித வளர்ச்சியும்

ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

★ எஸ். லோகநாதன்

உலகின் அனைத்து நாடுகளிலும் பொதுவாக அரச சார்பற்ற பொது நிறுவனங்கள் பல இயங்கிவருகின்றன. இவை மனித வளர்ச்சியில் அக்கறை கொண்டு பல்வேறு பணிகளையும் ஆற்றுகின்றதை நாம் அறிவோம்.

சர்வதேச ரீதியிலும் பிராந்திய, தேசிய ரீதியிலும் பல அமைப்புக்கள் எழுச்சி பெற்று ஒரு நாட்டின் அரசாங்கம் புரிகின்ற பணிகளில் பெரும் பகுதியைத் தாமே முன்னின்று நடாத்திவருகின்றன.

இலங்கையிலும், இப்பேர்ப்பட்ட அரசசார்பற்ற பொது நிறுவனங்களின் பங்களிப்பு இக்காலத்தில் அதிகரித்து வருகின்றன.

1978 இல் இடம் பெற்ற சூறாவளியின் பின்னர் இலங்கையின் கிழக்கு மாகாணமும் இத்தகைய அரச சார்பற்ற உதவிகளைப் பெறுவதில் முக்கியத்துவம் பெற்றது 1980க்களில் அடிக்கடி நிகழ்ந்த இனப்பிரச்சனைகளினூலும் இவ்வரச சார்பற்ற நிறுவனங்களின் பணி பெரிதும் வரவேற்பையும் முக்கியத்துவத்தையும் பெற்றுவிட்டது.

சமயத் தாபனங்களால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்புக்களும், அன்னிய நாடுகளின் உதவிகளுடன் இயங்கும் அமைப்புக்களும் இன்று சர்வதேச, தேசிய, அடிப்படையில் மிகவும் வளர்ச்சி பெற்ற போதிலும், மக்கள் மத்தியில் இவை போதுமான திருப்தியான வளர்ச்சி நிலையை ஏற்படுத்தவில்லை போல் தெரிகிறது.

ஏனெனில் இவ் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு திட்டங்களை முன்வைத்துள்ள பிரதேசங்களை கிராமப் பகுதிகளை, மக்களை நோக்கும் போது வழமையான சூழலிலும் வாழ்க்கைத் தரம் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இதையிட்டுத் தான் எமது ஆய்வின் சில உண்மைகளை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

இலங்கையில் குறிப்பாக றெட்பாணா, சமூக பொருளாதார முன்னேற்றக்கழகம், உலக தரிசன தாபனம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், இந்து இளைஞர் அமைப்புக்கள், கிறிஸ்தவ இளைஞர் அமைப்புக்கள், போரூட், றோட்டறிக் கழகம், லயன்ஸ் கழகம் ஆகியன பல்வேறு பணிகளை, திட்டங்களை நடாத்தி வருகின்றன.

சில அமைப்புக்கள் ஒரு தசாப்தமாக, இன்னும் சில தாபனங்கள் இரு தசாப்தங்களாக மேலும் சில மூன்று தசாப்தங்களாக இயங்கி வருகின்ற போதிலும் மக்கள் சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் போதுமான வளர்ச்சியை அடையவில்லை என்பதையே இத்தாபனங்கள் மேலும் மேலும் இயங்க வேண்டிய அவசியம் இருப்பதும் பெரும் தொகையான பணம் செலவிடப்படுவதும் சுட்டிக்காட்டுகின்றன.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணியில் பல்வேறுபட்ட திட்டங்களை, உதவிகளை நடாத்துகின்றன இவற்றில் மக்களுக்கு உடல் சார்ந்த தேவைகளின் மட்டில் வழங்கும் உதவிகளே அதிகமாக அமைந்து விடுகின்றனவே தவிர உளம், அறிவு சார்ந்த வகையில் வழங்கப்படும் உதவிகள் அதற்கான திட்ட வரைவுகள் குறைவு என்பதைவிட அவற்றின் பால் அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிகளவு ஈடுபாடு கொண்டு முன்னெடுத்துச் செல்வதில்லை என்பது தெளிவாகின்றது.

எப்பொழுதும் சாப்பிடவும், உடுக்கவும், இருக்கவும் வாய்ப்புக்களைச் செய்து கொடுத்துக் கொண்டே இருந்

தால் மக்களும் தொடர்ந்து சுய தொழில்கள் மட்டிலோ உயர்வான கல்வி - தொழில் நுட்ப துறைகளிலோ வளர்ச்சி பெற மாட்டார்கள் என்பதை விளங்காமல் இவ் அரசசார்பற்ற நிறுவனங்கள் இயங்குகின்றன என்பதை விட அவ்வாறு இயங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன என்பது பொருந்தும்.

மக்களும் எப்பொழுதும் கைநீட்டி உதவி பெற விரும்புகிறார்களே தவிர, குறுங்கால உடல் சார்ந்த உதவிகளைப் பெற்று நீண்ட காலத்தில் சுயமாக இயங்குவதற்கான வசதிகளை, சுயதொழில் நிலையங்களை உருவாக்கும் நிலையில் சிந்தித்து செயற்படுகிறார்கள் இல்லை என்பதை இப்போதெல்லாம் அவ் அரச சார்பற்ற நிறுவனங்களை நடாத்துவோர் சொல்லக் கேட்கின்றோம்.

எனவே சீனப் பழமொழி கூறுவதைப் போல மீனைக் கொடுப்பதை விட மீன் பிடிக்கக் கற்றுக்கொடு என்றுதான் இவ் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குக்கூறவேண்டி உள்ளது. அவர்களும் இதனை இப்போதெல்லாம் புரிந்து கொண்டு வருகின்றனர் என்பதும் உண்மை.

அரச சார்பற்ற தாபனங்களை நடைமுறைப்படுத்துபவர்களும் மக்களது எதிர்ப்புக்களில் இருந்து தப்பிக் கொள்ளவும், மக்கள் மத்தியில் தமது பெயர், அமைப்பு, நிலைப்பாடு குறைந்து விடக் கூடாது என்பதற்காகவும், ஏதாவது செய்து விடுவோம் எனும் ஓர் மேல் மட்டமான முறையில் இயங்குவதால், இக் குறைபாடுகள் ஏற்பட்டு விடுகின்றன. இது எல்லா அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் பொருந்தாதாயினும் பலவற்றிற்குப் பொருந்தும்.

மற்றும் இந்த அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையிலான தொடர்புகள், உறவுகள் சுமுகமாக இல்லாததனாலும் ஒரு முழுமையான திட்டத்தை செயற்படுத்த முடிவதில்லை என்பதுடன், மக்கள் இத்தாபனங்களை ஏமாற்றி உடலை வளர்த்துக்கொள்கிறார்களே தவிர, தம்மை உளம், அறிவு, ஆன்மீக நிலைகளில் வளர்த்துக் கொள்கிறார்கள் இல்லை என்பது தெளிவு. இதனை விட ஒரு சிலரே அனைத்து அரசசார்பற்ற தாபனங்களில் இருந்தும் அதிக உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இத்தாபனங்களுக்கிடையிலான உறவுகள் இன்மை ஆதாரமாய் இருக்கின்றதெனலாம்.

எனவே அரச சார்பற்ற தாபனங்கள் போட்டிக்குப் போட்டியாகப் பணத்தை வாரி வழங்காது, மக்களை எவ்வேளையும் கைநீட்டுபவர்களா மாற்றாது, விழிப்புணர்வை எற்படுத்தி சுயமான முயற்சிகளில் அவர்களை ஈடுபடுத்த தக்க விதத்தில் தமது செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், ஒரே பிராந்தியத்தில் ஈடுபடும் அரச தாபனங்களிடையே 'நல்ல தொடர்பும், உறவும் ஏற்பட வேண்டும் எனவும் நாம் விரும்புகின்றோம்.

எந்த ஒரு அமைப்பிலும் சில குறிக்கோள்கள் இருத்தல் வேண்டும். வளர்ச்சிக் குறிக்கோளுடனேயே மக்களின் தேவைகளில் நிறைவு காண்பதற்காக ஈடுபடல் வேண்டும். மக்களுக்கு வழங்கப்படும் உதவிகள், படிப்படியாக இன்னுமொரு தேவைக்கும், வளர்ச்சிக்கும், முயற்சிக்கும் வழியாக அமைய வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் நோக்கம், எப்பொழுதும் நிலைக்கும் குறிக்கோளாக, பொருள் உதவி, பண உதவி செய்வதில் மட்டும் அமையுமானால் எவ்வித பயனுமில்லை. மக்களும் வளர மாட்டார்கள்.

மற்றும் சில அரச சார்பற்ற தாபனங்கள் மக்களுக்கு சில உதவிகள், தேவைகள் அவசியம் என்று அவர்கள் உணராமலேயே கொண்டு திணிக்கின்றார்கள். இதுவும் மக்களைச் சோம்பேறிகளாக்குகின்றது.

முதலில் மக்களுக்குத் தேவைகளை உணர்த்துதல் வேண்டும். அவர்களை அதற்கு ஆயத்தப்படுத்துதல் வேண்டும். இத்தகைய வழிமுறை இல்லாததனால் தான் சில அரச சார்பற்ற தாபனங்களின் பணம் வீண்விரயம் செய்யப்படுகின்றது.

எனவே, மக்களுக்கு விழிப்புணர்வை வழங்கி, மக்களின் நீண்டகாலத் தேவைகளை உணர்த்தி, குறுங்கால பொருள் உதவிகளுடன், நீண்டகால கல்வி, தொழில்துறைக்கான உதவிகளை அதிகரித்து செயற்பட வேண்டுமெனவும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையே நல்ல தொடர்புகள் ஏற்பட்டு அதன் மூலம், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள் மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமெனவும் நாம் விரும்புகின்றோம்.

## மாணவர் பக்கம் (க. பொ. த. உயர்தரம்)

# நிருப மதிப்பீடுகள் – III

### இ) அருளப்பர் 4 / 7 - 21

இறைவனோடு நாம் கொள்ளும் நட்புறவுக்கு இரண்டு அடையாளங்கள் உண்டு. அவைதான் விசுவாசமும்' அன்பும். இவ்விரண்டையும் பற்றித் தனித்தனியே விளக்கிய அருளப்பர். அவைகளுக்கு இடையே உள்ள தொடர்பை இந்தப் பகுதியிலே படம் பிடித்துக் காட்டுகின்றார்.

உலகத்தில் எல்லாரும் அன்பு பற்றிப் பேசுகிறார்கள். கிறிஸ்தவர்கள் அல்லாதவரும் அன்பு செய்கின்றார்கள். ஆனால் கிறிஸ்தவ அன்புக்கும் கிறிஸ்தவத்திலிருந்து பிறவாத அன்புக்கும் வேறுபாடு உண்டா? அன்பு எங்கு இருந்தாலும், யாரிடம் இருந்தாலும், அது கிறிஸ்தவ அன்புதான். ஆயினும் அன்பைச் சிறப்பாக ''இது கிறிஸ்தவ அன்பு,, என்று சொல்வதற்கான ஓர் அடிப்படை உண்டு. அதுவே விசுவாசம். கிறிஸ்துவில் ஒருவன் கொண்டுள்ள விசுவாசத்தை அடிப்படையாக கொண்டது அந்த அன்பு. கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைக் கிறிஸ்தவன் அன்பு மூலம் வெளிக்காட்டுகின்றான். இதைத்தான் கிறிஸ்தவ அன்பு எனலாம். அதாவது கிறிஸ்தவ விசுவாசத்தின் பலனாக வரும் அன்புதான் கிறிஸ்தவ அன்பு. சின்னப்பர் கூட அன்பைப் பற்றிப் பேசினாலும், அன்பின் அடிப்படையை, ஏன் அன்பு செய்ய வேண்டும் என்ற காரணத்தைக் கூறவில்லை. ஆனால் அருளப்பர் அன்பு செய்ய வேண்டும் என்று மட்டும் சொல்லாது அதற்குரிய அடிப்படையையும் எடுத்துரைக்கின்றார். கிறிஸ்தவ அன்பு கிறிஸ்தவ விசுவாசத்திலே கட்டி எழுப்பப்பட்ட ஒன்றாய் இருக்க வேண்டும் அப்போது தான் அது நிலைத்து நிற்கும். அடிப்படை இல்லாத அன்பு அஸ்திவாரம் இல்லாதவீடு போன்றது.

ஒருவன் தான் கடவுளின் பிள்ளை என்று காட்டவிரும்பினால் அதனை அன்பு வழியாகத்தான் காட்டமுடியும். தந்தையாகிய கடவுள் அன்பு செய்கிறார் அவரது பிள்ளைகளும் அன்பு செய்திட வேண்டும். அன்பு செய்வது எனும் பொழுது யாரை அன்பு செய்வது? இறைவனையா அல்லது மனிதனையா? அருளப்பர் கூறும் அன்பில் இறையன்பும் பிறரன்பும் அடங்கியுள்ளது. காரணம் இறையன்பே பிறரன்பின் அடிப்படை. பிறரன்பு என்பது இறையன்பில் அடங்கியிருக்கின்றது.

அன்பே கடவுள் என்பதன் பொருள் அவர் அன்பே உருவாக இருக்கின்றார் அன்பே இயல்பாக இருக்கின்றார் என்பதாம். இறைவன் தம் இயல்பிலே அன்பில் இணைந்து ஒரு குடும்பமாக இருக்கின்றார் மீட்பின் வரலாற்றிலும் இறைவனின் அன்பைக் காண்கின்றோம். அன்பின் உச்சக் கட்டமாக கடவுள் தம் மகனையே உலகுக்கு அனுப்புகின்றார். கடவுளின் அன்பு இயேசுவில் வெளிப்படுத்தப்பட்டது.

அன்பு கடவுளோடு இருவித இணைப்பை ஏற்படுத்துகின்றது. ஒருவன் கடவுளை அறிவதால் தான் அன்பு செய்கின்றான்; அன்பு செய்வதால் தான் கடவுளை அறிந்தவராகின்றார். அன்பினால் தான் கடவுளை அறிகிறோம். அவரைப் பார்க்க முடியாது. அவரது செயலைப் பார்க்க முடியும் எனவே அன்பு செய்பவன் கடவுளை அறிந்தவனாகின்றான். கடவுளிடமிருந்து பிறந்தவனாகின்றான். தான் கடவுளிடமிருந்து வருவதை நிரூபிக்கின்றான்.

---

கல்லைச் செதுக்கி உருவாக்குவது போல் மனிதனை உருவாக்க முடியாது. தனக்குத்தானே உருவாகுமாறு அவனுக்குப் போதிப்பதுதான் முக்கியம்.

முன்ஷி

இறைவனே முதன் முதலில் அன்பு செய்தவர் ஆவார். இந்த அன்பை அவரே விரும்பிப் பொழிகின்றார். அவர் தாமே விரும்பி தம் அன்பை வெளிப்படுத்துகின்றார். மீட்பின் வரலாறு அன்பின் வெளிப்பாடு அதை ஆரம்பித்து வைத்தவர் இறைவன். அதைப்பற்றித் திட்டமிட்டவர் அவர். அதைச் செயல்படுத்த வழிமுறைகளை வகுத்துக் கொண்டவரும் அவரே.

மனித அன்பு கடவுள் காட்டும் அன்புக்குப் பிரதி அன்பாகும். கடவுள் அன்பு நிறைந்தவராய் இருக்கின்றார். எனவே அவரது பிள்ளைகளும் அன்பு செய்திடல் வேண்டும். அன்பு செய்தல் வேண்டும் என்பது வெளியே இருந்து வருகின்ற ஒரு கட்டளை அன்று அது ஓர் உள் தூண்டுதல் உள்ளத்தின் ஆழத்தில் எழுகின்ற தேவை. நம் உள்ளத்தில் உதிக்கின்ற தூய ஆவியின் தூண்டுதல்.

கடவுளை யாரும் இதுவரை கண்டதில்லை. "என்னைக் கண்டவன் தந்தையையே கண்டான்" என்று கூறிய இயேசுவும் தமது உடலுடன் எம்மத்தியில் இன்று இல்லை. அவர் தம் தந்தையிடம் திரும்பி விட்டார். இப்பொழுது கடவுளை எப்படிக் காண்பது என்ற வினவுக்கு பதிலளிக்கின்றார். அன்பு செய்து வாழ்பவர்களிடையே இறைவனைக் காணலாம். "நாம் ஒருவருக்கொருவர் அன்பு செய்தால் கடவுள் நம்முள் நிலைத்திருக்கின்றார்."

அன்பு செய்பவனுக்கும், அன்பு செய்யாதவனுக்கும் உள்ள வேறுபாட்டைப் பின்வருமாறு வகுக்கலாம்.

| அன்பு செய்பவன் | அன்பு செய்யாதவன் |
|---|---|
| கடவுளிடமிருந்து பிறந்துள்ளான். | சாவில் நிலைகொள்கிறான். |
| கடவுளை அறிவான். | கொலைகாரன். |
| கடவுள் அவனுள் நிலைத்திருக்கின்றார். | கடவுளை அறிவதில்லை. |

பெரிய செயல்களைப் போலவே சிறிய செயல்களையும் சிந்திக்கக் கூடிய மனமே உண்மையும், உரமும் பொருந்திய மனமாகும்.

அவனும் கடவுளுக்குள் மனச்சான்று அவனைக் நிலைத்திருக்கிறான். கண்டனம் செய்யும்.

## வினாக்கள்

(அன்பு)

1. புனித சின்னப்பர் கூற்றுப்படி, உண்மையான அன்பின் பண்புகள் நான்கினைத் தருக?

2. "இவ்வுலக செல்வங்களை உடையவன் ஒருவன், தன் சகோதரன் வறுமையுற்றிருப்பதைக் கண்டு, மனமிரங்காவிடில் அவனுள் கடவுளன்பு நிலைத்திருக்கிறதென்று எவ்வாறு சொல்ல முடியும்?" இக் கூற்று வெளிப்படுத்தும் உண்மையான அன்பின் பண்பை விளக்குக.

3. "அன்பு மற்றவர்களின் பிழைகளைக் கண்டு மகிழாது ஆனால் அது உண்மையில் மகிழ்ச்சி அடையும்." இதில் கூறப்படும் செய்தியைச் சுருக்கமாக விளக்குக.

4. அன்பை மற்றவர்களுக்குக் கொடுக்கும் திறமையுள்ளவர்கள் தான் உடல், உள்ளத்தினால் வளர்ச்சி பெற்ற ஒருவராவர் இக்கூற்றை நீர் ஏற்றுக் கொள்கிறீரா? ஏன்? அப்படியானால் உண்மைக் கிறிஸ்தவனின் அன்பின் நோக்கத்தை அலசி ஆராய்க

5 இறைவன் தம் அன்பை நமக்கு எப்படி வெளிப்படுத்தினார்?

6 "நம் அன்பு பேச்சிலும், சொல்லிலும் இராமல் செயலில் விளங்கும் உண்மையான அன்பாய் இருக்கட்டும்." இதை விளக்குக.

7. புனித அருளப்பரின் நிருபங்களின்படி, அன்புச் செயலின் நான்கு குணங்களைத் தருக.

8. அ) அன்பே கடவுள் என அருளப்பர் கூறுகின்றார். இதை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா?

ஆ) நீர் அவ்வன்பை அனுபவித்தது எவ்வாறு?

இ) உம் அனுபவப்படி முதலில் இறைவனே நமக்கு அன்பு செய்தார் என்பது எண்பிக்கப்படுகின்றதா?

# உயிர்ப்பின் இரகசியம்



✶ மலர்வேந்தன்

இயேசு உயிர்த்துவிட்டார் என்னும் செய்தி நமக்கெல்லாம், மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருகின்ற நற்செய்தி, இது கிறீஸ்தவ விசுவாசத்தின் அத்திவாரம்.

"கிறிஸ்து உயிர்த்திரா விட்டால் எங்கள் போதனையும் வீண், உங்கள் விசுவாசமும் வீண்" என்று கூறுகிறார் புனித சின்னப்பர்.

உயிர்ப்பு பற்றிய நம்பிக்கை மானுடத்தின் நீண்டகாலக் கனவு.

கிறீஸ்துவுக்கு முன்னும் உயிர்ப்புப் பற்றிய நம்பிக்கை பல்வேறு இன - சமூகக் குழுக்களிடத்தில் நிலவி வந்துள்ளது. யூதமக்களிலும் ஒருபிரிவினர் தவிர பெரும்பான்மையோர் உயிர்ப்பில் நம்பிக்கை கொண்டவர்கள்.

இறந்த உடல்களைத் தாழிகளிலும், கல்லறைகளிலும், கூர்நுதிக் கோபுரங்களிலும் பத்திரப்படுத்தி வைக்கும் பண்டைய மரபுக்கு உயிர்ப்புப் பற்றிய நம்பிக்கையும் ஒரு காரணம் என்று சொல்வதில் தவறில்லை.

இதன் காரணம் வெட்டவெளிச்சமானது. மனிதனுக்கு இயல்பாக வாழ்வின்மேல் உள்ள அடங்காத ஆசையும், அழுத்துகின்ற சுமைகளிலிருந்து வெளியேற விரும்பும் விடுதலை வேட்கையும், உயிர்ப்பு பற்றிய ஆசையை, அந்த எதிர்பார்ப்பின் வழியே பிறந்த நம்பிக்கையை வளர்த்திருக்க வேண்டும். இந்த எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் கிறீஸ்துவில் நிறைவேறும் என்று பண்டைய உலகம் எதிர்பார்க்காவிட்டாலும் இவையெல்லாம் இறைவனின் திட்டத்தில் கிறீஸ்துவின் உயிர்ப்புக்கு ஓர் ஆயத்தம், முன்னடையாளம் என்ற முடிவுக்கு நம்மைக் கொண்டுவருகிறது. சாவின் பிடிக்குள் வாழ்வை முடித்துக் கொண்டிருந்த மானுடத்துக்கு கிறீஸ்துவின் உயிர்ப்பு ஒரு புதிய செய்தியைத் தருகிறது.

பாவத்தால் விளைந்தது சாவு. சாவை வெல்ல வேண்டுமெனில் பாவத்தை விட்டுவிட வேண்டும். என்பதே அது. உயிர்ப்பைச் சுவைக்க வேண்டுமெனில் பாவத்தை விட்டுவிட வேண்டும் என்பதே பொருள்.

பாவம் என்று சொல்லப்படும் குற்றத்தை, அதற்கு அடிப்படையான சுய நலனை விட்டுவிடுதல் மனித இயல்புக்குச் சுலபமானது அல்ல. ஏனெனில் ஒவ்வொரு மனிதனும தனித்தன்மை, ஆளுமை கொண்டவனாக இருப்பதால் தற்சார்பு கொண்டவனாக இருக்கிறான். இத்தற்சார்புத் தன்மை நான், எனக்கு என்னும் சுயநல மனப்பாங்கை ஆழமாகக் கொண்டுள்ளது; மனிதனுடன் இரண்டறக் கலந்துள்ளது. இது கிறீத்தவ இறையியலின் அடிப்படையில் முதல் மனிதனால் முழுமனித குலத்துக்கும் படிந்துள்ளது. ஆகவே உயிர்ப்பைப் பற்றிய உண்மையை மனிதனுக்கு உணர்த்த மற்றுமொரு மாபெரும் மனிதன், பாவத்தின் பாரம்பரியத் தாக்குதலில் சிக்காத தெய்வீக மனிதன் தேவைப்பட்டான். அந்தத் தேவையைத் தந்தையாகிய இறைவனின் அன்பு, அளவிட முடியா இரக்கத்தின் காரணமாக நிறைவேற்றி வைத்தது. அதன் விளைவுதான் இறைமகன் இயேசுவின் பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு.

முழுமனித குலத்தின் ஒரே பிரதிநிதியாக நின்று பாவத்தின் விளைவான சாவோடு கிறீஸ்து நடாத்திய போராட்

டத்தின் வெற்றிவிழா இது. இதனைப் புனித சின்னப்பர் தமக்கே உரிய பாணியில் ''ஒரே ஒருவனின் குற்றம் எல்லா மனிதருக்கும் தண்டனைத் தீர்ப்பாய் முடிந்தது போல் ஒரே ஒருவரின் ஏற்புடைய செயல் எல்லா மனிதருக்கும் வாழ்வளிக்கும் விடுதலைத் தீர்ப்பாய் மலர்ந்தது.'' என்று அழகாகக் கூறியுள்ளார்.

அந்த வசனத்தில் உள்ள ஒரு சொல் மிக முக்கியமானது. உயிர்ப்பின் வழியை அச்சொல் தன்னுள் பொதிந்துள்ளது. அச்சொல் இதுதான் 'ஏற்புடைய செயல்' யாருக்கு? தந்தையாகிய இறைவனுக்கு. கிறிஸ்து தம் வாழ்நாள் முழுவதும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதையே தம்கடனாகக் கொண்டிருந்தார். கல்வாரியில் தம் உயிரைக் கொடுக்கும் இறுதி நேரம்வரை தந்தையின் விருப்பத்தை அவர் தவறாது நிறைவேற்றினார். தந்தையின் விருப்பம் எது என்பதைக் கிறிஸ்துவின் வாழ்வு சொல்கிறது. அதுவே அவரது இலட்சியமாகவும் இருந்தது.

''எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர் குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார்.''

தந்தை அனுப்பியதன் நோக்கத்தை, அவரது விருப்பத்தைத் தனயன் தவறாது நிறைவேற்றியதனால்தான் தந்தை அவரை மகிமைப்படுத்தினார். அவரது செயலை முழுமையாக ஏற்றுக் கொண்டார்.

உயிர்ப்பின் இரகசியம் இங்கே இருக்கிறது. அது தனி மனிதனை மட்டும் உள்ளடக்கியதல்ல, சமூகப்பார்வை கொண்டது; உலகளாவியது. மனிதனை - பரந்துள்ள சமூகத்தை அடக்கி, ஒடுக்கி வைத்திருக்கும் சுமைகளை, சுரண்டல்களை, பிளவுகளை, பேதங்களை, வறுமை, அறியாமை, வன்முறை, நோய் சண்டை போன்ற சமூகக் கொடுமைகளை, மனிதனுக்கு மனிதன் மாட்டியிருக்கும் விலங்குகளை உடைத்தெறிய ஒவ்வொரு மனிதனும் தன்னளவிலும் சமூக அளவிலும் முயலும் போது உயிர்ப்பின் வித்துக்கள் அங்கே விதைக்கப்படுகின்றன. அது உண்மை, தியாகம், மன்னிப்பு, பணிவு போன்ற உயர்ந்த மதிப்பீடுகளால் வளர்க்கப்படுகின்றன.

இறைவன் தம் மகனில் விசுவாசம் கொண்டு அவர் தடம்பற்றி நிற்போரை நிச்சயம் மகிமைப்படுத்துவார். உயிர்ப்பின் வாசல்களை உயரத் திறந்துவிடுவார். இதுவே இறையரசு! இறைவன் நம் அனைவர்க்கும் வழங்கும் பரிசு!

---

கல்லறைகள்

வாழ்க்கைக்

கதைகளின்

முடிவு - என்பது

பழங்கதையாச்சு

எங்கள்

இயேசுவின் உயிர்ப்பால்

கல்லறைகள்

உடைந்தன

வாழ்வின் கதவுகளாய்

மாறின

ஓ! சாவே!

பாவம்

நீ

செத்துப்போனாய்!

== பிரியா



# பாதை கொஞ்சம் மாறிப்போனால்

மிருணாளினி தவராஜா

## 3

பைரவி அடிக்கடி ஜூலி வீட்டுக்கு வந்து போகத் தொடங்கினாள். ஜூலி மேல் அவளுக்கு ஏற்பட்ட அனுதாபம் சிறிது சிறிதாக மறைந்து அதுவே இணை பிரிக்க முடியாத அன்பாக மாறியது. ஜூலியை எத்தனை தூரம் கவனிக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு பராமரித்து வந்தாள். ஜூலியும் பைரவிக்கா ... பைரவிக்கா என்று உயிரை விட்டாள். ஒரு நாள் சுரேனும் பைரவியும் ஜூலியிடம் வந்தனர். சுரேனே முதலில் பேச்சைத் தொடக்கினான்.

ஜூலி .. நீயும் கல்யாண வயசுக்கு வந்திட்டே; உன்னோட அண்ணன் என்கிட்ட ஒப்படைச்சுட்டுப் போனப்ப எனக்குப் பொறுப்புத் தெரியல. இப்போ நீ தலைக்கு மேல வளரும் போதுதான் என்னோட பொறுப்ப உணர முடியறது. அதனால உனக்குத் திருமணம் செய்து வைக்கிறதா நானும் பைரவியும் பேசி முடிவெடுத்திருக்கோம். பையன் நல்லவன், உனக்குப் பிடிச்சிருந்தா சொல்லு வர்ற நல்ல முகூர்த்தத்திலேயே திருமணத்த நடத்திடலாம்

சுரேன் எனக்குச் சண்ணிருந்தா பையனப் பாத்துப் பிடிச்சிருக்குன்னு சொல்லலாம். ஆனா எனக்கோ கண்... சுரேனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பைரவி அவனருகே வந்தாள் சுரேன் நீங்க கொஞ்சம் வெளியில இருங்க நா ஜூலிகிட்ட பேசறேன். சுரேன் மௌனமாய் வெளியே போய் விட்டான். பைரவி ஜூலியருகே வந்து அமர்ந்தாள். என்ன பைரவிக்கா பேசாம இருக்கீங்க? நா ஒண்ணு கேப்பேன் தப்பா எடுத்துக் காதீங்க... பரவால்ல கேளு...

ஒரு பொண்ணோ ஆணோ துணையை தெரியறப்போ இரண்டு விதமா தெரிஞ்செடுத்துக்குவாங்க ஒண்ணு கண்ணால பாத்து, மத்தது மனசால பாத்து தெரிஞ்சுக்கலாம். ஆனா நா இந்த ரெண்டு வகையாலும் நீங்க பேசியிருக்கிற பையனப் பாக்கலே அப்போ எப்பிடி நா இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்க முடியும்? ஜூலி சிறு பிள்ளையைப் போன்று பொரிந்து தள்ளினாள். பைரவிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

ஜூலி... உனக்குத்தான் கண்ணால பார்க்க முடியாது. அப்போ நீ யாரையும் மனசில நெனச்சுருக்கியா? ஜூலி வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

அட... நம்ம ஜூலிக்குக் கூட காதல் பண்ணத் தெரிஞ்சிருக்கே? ஆமா... ஆளு யாரு?

எனக்கு வெக்கமாயிருக்கு நா சொல்ல மாட்டேன் ..

சொல்லலண்ணா எப்பிடி? சொன்னாத்தானே நா பாத்துப் பேசி முடிவெடுக்கலாம்.

நீங்க ஒண்ணும் பாக்க வேணாம் பேசினா மட்டும் போதும்

என்னடா இது புதிராயிருக்கு? பாக்காம எப்பிடிப் பேசிறது? புரியும் படியா சொல்லும்மா...

வந்து .. வந்து ......சு..... சுரேன்தான்

பைரவிக்கு யாரோ உச்சந்தலையில் ஓங்கி அடித்தது போலிருந்தது.

நீ...நீ...என்ன சொல்றே ஜூலி?...

ஆமாக்கா...நா சுரேன முழு மனதோட விரும்பறேன், கட்டிக்கிட்டா அவரத்தான்...

அவர் உன்ன விரும்பறு ரான்னு தெரிஞ்சுக்காம ஒரு முடிவெடுத்துக்கிறதில தப்பில் லேயா ஜுலி? பைரவி அவளே இடைமறித்துக் கேட்டாள்.

அக்கா இதோ பார்.... செயினோட பென்டன. பைரவி ஒன்றும் விளங்காமல் விழித் தாள். ஆமா பென்டனுக் கென்ன?

அதத் திறந்து பாரேன்.. பைரவி கைகள் நடுங்க அதைத் திறந்து பார்த்தாள். அதனுள் ஜுலி கபடமற்ற சிரிப்புச் சிரித்தபடியும் மறு பக்கம் சுரேனும் இருப்பதைக் கண்டாள். கீழே Your loving brother என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

ஜுலி இதுக்குள்ள இப்படி இருக்குன்னு எப்படித் தெரியும்?

பைரவிக்கா சுரேன் என் னோட பர்த்டேக்குப் பிர சன்ற் பண்ணினப்போ எனக் குத் தெரியாது ஒருநாள் இந்தப் பென்டன் கீழ விழுந் திடிச்சி. தட்டுத் தடுமாறி எடுத்தப்போ பென்டன் ரெண்டா விரிஞ்சிருந்திச்சி உள்ள கை வச்சுப் பாத்தேன் ஏதோ பேப்பராட்டம் கையில பட்டுது. வேலக்காரியக் கூப் பிட்டுக் கேட்டேன் இதுக் குள்ள என்னோட போட்டோ வும் சுரேனோட போட்டோ வும் இருக்கிறதாச் சொன்னாள் பைரவிக்கு அப்போது தான் எல்லாமே புரிந்தது. வேலைக் காரிக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாத காரணத்தால் வந்த விளைவு? என்ன பைர விக்கா மௌனமாயிட்டீங்க?

ம்.... அ.... அதெல்லாம்... ஒண்ணுமில்ல.

பைரவிக்கா சுரேன் என் னைக் கல்யாணம் பண்ணிக்கு வாரா? பைரவிக்கு ஜுலியின் குழந்தை முகத்தை கண்டதும் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. ஜுலியைக் கட்டிக் கொண்டு அழுதாள். ஜுலியும் சிறுபிள்ளையாய் விம்மி விம்மி அழுதாள்.

ஏம்மா ஜுலி நீ அழறே? சுரேன் என்னைக் கட்டிக் குவாரா?

நிட்சயமா உன்னைத்தா சுரேன் கல்யாணம் பண்ணு வார் பயப்படாதே ஆனா ஒண்ணு இப்போதைக்கு அவ சரப்பட்டு சுரேன் கிட்ட எதையாவது கேட்டுடாதே என்ன? சரியா?

ஜுலி மௌனமாகத் தலை யாட்டினாள். பொங்கி வரும் அழுகையை அடக்கிக் கொண்டு பைரவி வெளியே வந்தாள். சுரேன் காரினுள் காலை நீட்டிய படி நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

சுரேன்... சுரேன்... பைரவி யின் குரல் கேட்க தூக்கம் கலைந்து எழுந்தவனுக்கு பைர வியைக் கண்டதும் அதிர்ச்சி யாயிருந்தது

என்ன பைரவி அழுதியா? முகமெல்லாம் சிவந்திருக்கு?

அதெல்லா ஒண்ணுமில் லங்க. வண்டிய எடுங்க போகலாம்.

போகும் வழியில் இரு வரும் எதுவுமே பேசிக் கொள்ளவில்லை. பைரவிக்கு சுரேன் வழியில் தன்னை எது வும் கேட்காதது நிம்மதியா யிருந்தது.

மறுநாள் பைரவிக்கு நித்திரை விட்டு எழும்போதே தலையெல்லாம் விண் விண் னென்று வலித்தது படுக் கையை விட்டு எழக்கூட முடியவில்லை.

ஏம்மா பைரவி உடம் புக்கு ஏதாச்சினும் சுகமில் லேயா? ராத்திரி கூடச்சாப்பி டாமப் படுத்திட்டே எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டிட்டுச் செய்யா தேன்னு இதுக்குத்தா சொல் லறது பார்வதி சொலிக் கொண்டே வந்து பைரவியின் தலையைத் தடவினாள்.

அம்மா என்ன இன்னும் காபி வரலே? பைரவி என்ன பண்றா? சுரேன் கேட்டபடி வந்தான். ஆமாண்டா உனக் குக் காபிதான் முக்கியம். இங்க வந்து பார்... பைரவிக்கு காய்ச்சல் நெருப்பாக் காயுது.

பார்வதி சொன்னதைக் கேட்ட சுரேன் பயந்து விட் டான். பைரவி இருந்த அறையை நோக்கி ஓடி வந் தான். பைரவியின் அருகில் அவன் வர பார்வதி எழுந்து போய் விட்டாள்.

என்ன பைரவி? என்ன பண்றது? சுரேன் ஆதரவுடன் அவளது கையைப் பற்றினான். பைரவி தனது கையை அவ னிடமிருந்து விடுவித்துக் கொண்டாள்.

என்ன பைரவீ உன்னப் புரிஞ்சிக்கவே முடியுதில்லேயே. சாதாரண தலைவலி வந்தாக் கூட சுரேன் எம்பக்கத்திலேயே இருந்துக்கங்க என்று கையைப் புடிச்சுக்குவே. இப்போ என்னை டான்னகையைப் பிடிச்சஉடனே இழுத்தெடுக்கறே? உனக்கு நேத்தையிலிருந்தே சரியில்ல. ஜுலி என்ன சொன்னா? பைரவிக்குப் பகீர் என்றது.

ம்... ஜுலி... யோசிச்சுச் சொல்றேன்னு சொல்லி யிருக்கா...

அப்போ நீ எதுக்கு ஒரு மாதிரி இருக்கே?

ஐயோ! என்னங்க நீங்க எனக்கு சின்னதாக ஒரு தலைவலி, அவ்வளவு தான்... அவளது மனம் ஜாக்கிரதை ஜாக்கிரதை என்று கூவிக் சொண்டிருந்தது. சுரேன் சிரித்துக் கொண்டே போய் விட்டான். அந்தக் கள்ளமில் லாச் சிரிப்பு அழுகையாக மாறுமென்று அவன் கன விலும் நினைத்திருப்பானா?

(தொடரும்)



இளைஞர் அரங்கம்

# ஒன்றிப்பு

இறைவன் ஒன்று கூட்டிய சமூகம், இன்று உலகில், பொருளாதார, இன, மொழி, சமய (படைப்) பல அடிப்படைகளில் பிரிந்து தன்னையே அழித்துக் கொண்டிருக்கும் நிலையில், சமூகங்களிடையே, இனங்களிடையே, நாட்டினரிடையே, பிராந்திய ரீதியிலே ஒன்றிப்பு அவசியம் என்பது ஒவ்வொரு அமைப்பாளர்களாலும் தலைவர்களாலும் வலியுறுத்துப்படுகின்றது.

உண்மையான ஒன்றிப்புக்கு மனமாற்றம். இதயத்தூய்மை, தூய வாழ்வு அவசியம் என்பதை உலகில் பலர் புரிந்துகொண்டு செயற்படாததாலேயே மனித சமூகம் தன்னையே ஏமாற்றிக் கொண்டும் அழித்துக் கொண்டும் இருக்கிறது.

அன்பு செய்தவர்கள் சண்டையிட்டுக் கொண்டபின் மீண்டும் ஒன்றிணைய நினைக்கும் போது கடந்த காலத்தில் தாங்கள் இன்பமாய் கழித்த காலங்களை நினைத்துப் பார்க்கும் போதே ஒன்றிப்பு முனைப்படையும்.

பிறர் நமக்கு இழைத்த கொடுமைகளுக்காகவோ, தீங்குகளுக்காகவோ, அவர்களை மன்னிக்க மனமின்றி இருந்தால் எமது உடல், உள ஆன்மீக நலனைப்பல சமயங்களில் மிக ஆழமாகப் பாதிக்கும் என்பதை நாம் உணருதல் வேண்டும்.

"என்னால் மன்னிக்க முடியும், ஆனால் மறக்க முடியாது" எனும் வாதத்திலிருந்து நாம் முற்றாக மாற வேண்டும்.

இறைவனோடு - இயற்கையோடு

பிரபஞ்ச சக்திகளோடு - பிற சமயங்களோடு

ஏனைய இனத்தவரோடு - பிற மொழியினரோடு

ஒன்றித்து வாழும் புதிய விழிப்புணர்வு ஏற்படும் போதே, எல்லாம் இணைந்த இனிய சமுதாயம் உருவாகும் என அன்புக்குரல் கொடுப்பது.

— கலையுலகன் —

# ஈஸ்டர் சபதம்

## சிறுகதை

சூசை முத்து உயிர்ப்பு தினத்தன்று காலை திருப்பலியில் கலந்து விட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அவரது ஏழுவயதான ஒரே மகள் அப்பாவின் கைகளைப் பிடித்தவளாக நடந்து வந்தாள். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு, காலமான மனைவியின் பிரிவால் சூசையின் உள்ளம் வருந்திக் கொண்டிருந்தது.

அவள் உயிரோடிருக்கும் வரையிலும் குடிப்பழக்கத்தைக் குறைத்துக் கொள்ளும்படி வற்புறுத்தி வந்தாள். குருவானவரும் அவ்வப்போது புத்தி சொன்னார் இவர் திருந்தவே இல்லை.

உயிர்ப்பு திருப்பலி முடிந்தபின் குருவானவர் சூசையிடம் பேசினார்.

'மிஸ்டர் சூசை குருவானவர் என்கிற முறையில திரும்பத் திரும்பக் கேட்கிறேன். குடிப்பழக்கத்தைக் குறையும். உங்க மகளுக்காக நீங்க ஆரோக்கியமாக வாழ வேண்டாமா? உங்க குடிப்பழக்கத்தை நிறுத்தக் கஷ்டப்பட்ட உங்க மனைவியின் ஆன்மா சாந்தியடைய வேண்டாமா? நமக்காகப் பாடுபட்டு உயிர்த்த ஆண்டவர் பெயரால் கேக்கிறேன். குடியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து விட்டுடுங்க.

குருவானவரின் புத்திமதியை சூசை நினைவு படுத்தினார். அவர் சொல்றதும் சரிதான். என் மனைவி மனவேதனையோடு சாவதற்கு நான் தான் காரணம். அவளது ஆன்ம சாந்திக்காகவும், அவளது நினைவுச் சின்னமான என் மகளின் நலனுக்காகவும் நான் குடிப்பழக்கத்தை விடனும். 'உயிர்த்த ஆண்டவரே! எனக்கு உறுதியான உள்ளத்தைக் கொடும். இந்த சாராயக் கல்லறையில் இருந்து என்னை உயிர்ப்பியும்' என்று சூசை செபம் சொல்லிக் கொண்டே வந்தார்.

சூசையின் நண்பர் தோமசின் வீட்டில் டிஸ்கோ இசை முழங்கிக் கொண்டிருந்தது வீட்டின் முன்னே சிவந்த கண்களுடனும், அவிழ்ந்த வேட்டியுடனும் நின்றிருந்த தோமஸ் 'உயிர்த் தெழுந்தாரே இயேசு உயிர்த் தெழுந்தாரே' என்று பாடினார். சூசையின் மகளை அலாக்காகத் தூக்கி முத்தமிட்டு, சூசையின் கைகளைப் பிடித்து வீட்டினுள் இழுத்துச் சென்றார்.

மேசையில் காலியான விஷ்கிப் போத்தல்கள் கிடந்தன. தோமசும் அவர் மனைவியும் சூசையின் சுகநலன்களை விசாரித்தனர். காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகும்படி கட்டாயப்படுத்தினர்.

வேலைக்காரன் உணவு கொண்டு வந்தான் இடியப்ப புரியாணி, கோழிக்கறி, கோழி ரோஸ்ட், முட்டை இவற்றுடன் பிரண்டி, விஷ்கி போத்தல்களும் மேசையை நிறைத்தன.

'தயவு செய்து இதைக் கொண்டு போங்க' என்று கூச்சலிட்டபடியே எழுந்தார் சூசை.

தோமசின் மனைவி ஆச்சரியப்பட்டாள். வருஷம் முழுவதும் குடிக்கின்றவர் ஈஸ்டரன்று குடிக்காவிட்டால் அது சாதாரண விஷயமா?

போதையில் நிதானமிழந்து தோமஸ் ஒப்பாரி வைத்தார். 'நண்பனே நமக்காக கல்வாரியில் இரத்தம் சிந்தின இயேசுவை அவமதிக்காதே!...பாவிப் பயலுங்க அவரைச் சிலுவையில அறைஞ்சி கொன்னுங்க... அந்தத் துக்கம் தாளாம நாமெல்லாரும் நாற்பது நாளா நோன்பிருந்தம். ஒரு சொட்டு விஷ்கி கூடகுடிக்காம உபவாசம் இருந்தோம். ஆனா இன்னிக்கு ஆண்டவர் வெற்றிகரமா உயிர்த் தெழுந்திட்டார். இந்த சந்தோஷத்த நாம கொண்டாட வேண்டாமா? வா! கோழிக்கறியும், புரியாணியும் சாப்பிட்டு கொஞ்சம் பிறெண்டியும் குடிச்சு மகிழ்வோம்...

(21ம் பக்கம் பார்க்க)

# விவிலியப் புதிர் 22

லூக்காஸ் நற்செய்தி இரக்கத்தின் நற்செய்தி என்றும் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள நற்செய்தி என்றும் கூறப்படுகிறது. உண்மையிலேயே லூக்காஸ் நற்செய்தியை வாசிப்பவர்கள் அதில் பல பெண்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதை அறிவார்கள். இந்த மாத விவிலியப் புதிரும் புனித லூக்காஸ் நற்செய்தியை மையமாக வைத்து அமைக்கப் பட்டுள்ளது.

பின்வரும் தகவல்களைக் கொண்டு புனித லூக்காஸ் கூறும் பெண்கள் யார் என்பதைக் கண்டு பிடியுங்கள்.

1. நல்ல பங்கைத் தேர்ந்து கொண்டவளாக இயேசு பாராட்டிய பெண்..........
2. ஏழு பேய்கள் நீங்கப் பெற்ற பெண்..........
3. வானதூதர் வாழ்த்திய பெண்..........
4. காய்ச்சலில் நின்று வீடுவிக்கப்பட்ட பெண்..........
5. இவள் வயிற்றினுள்ளே குழந்தை துள்ளியது..........
6. ஏரோதின் காரியத் தலைவன் கூசாவின் மனைவி..........
7. 84 வயதானவள் இறைவாக்குரைத்தவள்..........
8. 'இவனும் அவனுடன் இருந்தான்' என்று கூறியவள்..........
9. இயேசுவின் போர்வையைத் தொட்ட பெண்..........
10. கல்லறையில் இருந்து திரும்பிய பெண்களில் ஒரு அப்போஸ்தலரின் தாய்..........

பெயர்:..........

முகவரி:..........

பரிசு 50/-, 25/- முடிவுத் திகதி: 15 - 4 - 91

## விவிலியப் புதிர் - 20
### விடைகள்

1. தோமையார்
2. மரியாள்
3. விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்
4. பிறவிக் குருடன்
5. மதலேன் மரியாள்
6. நிக்கொதேமு
7. சமாரியப் பெண்
8. ஸ்நாபக அருளப்பர்
9. மார்த்தாள்
10. இராயப்பர்

### பரிசு பெறுவோர்

1ம் பரிசு

ஞானப்பிரகாசம் கிறிஸ்ரி
வீச்சுக்கல்முனை
மட்டக்களப்பு

2ம் பரிசு

M. அன்னம்மா குலாஸ்
1ம் வட்டாரம், வங்காலை, மன்னார்.

### பாராட்டுப் பெறுவோர்

1. J. கலிஸ்டா ஜெயா
புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயம்
வந்தாறுமூலை

2. ஞா. புளோறி மாலினி
தபாற்கந்தோர் வீதி, அக்கரைப்பற்று - 8

3. J. ஆனந்த் சொய்சா
1ம் வட்டாரம், வங்காலை, மன்னார்.

4. T. மரியம்
31, களனி கங்கை மில் றோட்
மட்டக்குளி

5. லூர்த்து ஜுனிற்றி பர்னாந்து
143/4 ஜிந்து பிட்டித் தெரு,
கொழும்பு - 13.

பங்குபற்றியோர் - 76
சரியானவிடை அளித்தோர் - 21
அனைவருக்கும் எமது நன்றி.

## ஏன் தெரியுமா?

1. இங்கிலாந்து நாட்டு அரசி காரில் பயணம் செய்து கொண்டிருக்கிறார் என்பதைச் சிறு குழந்தை கூடக் கண்டு பிடித்து விடும் ஏன் தெரியுமா? காரில் இலக்கம் இராது.
2. முற்காலத்தில் எகிப்து நாட்டில் பூனையைக் கொன்றால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஏன் தெரியுமா? பூனை தெய்வத்தின் அவதாரம் என்று கருதி வந்தார்கள்.
3. நரம்புத் தளர்ச்சி உண்டானால் கைகள் நடுங்குகின்றனவே ஏன் தெரியுமா? நம் உடலில் உள்ள நரம்புகளில் நான்கில் ஒரு பங்கு நம் கைகளில் உள்ளன. அதனால்தான் நரம்புத் தளர்ச்சி வந்தால் கைகள் நடுங்குகின்றன.
4. தலைமுடி ஏன் வெள்ளையாகிறதென்று தெரியுமா? நம் உடலில் உற்பத்தியாகும் மெலினின் என்ற சாயப்பொருள்தான் முடியைக் கறுப்பாக வைத்திருக்கிறது. அது போதிய அளவு கிடைக்காதபோது முடி நரைக்கத் தொடங்கிவிடுகிறது. இச்சாயப் பொருளை நாம் விற்றமின் கே அடங்கிய பொருட்களிலிருந்து பெறலாம்.

## மருத்துவம்

1. புரோட்டீன் சத்து உங்கள் உணவில் கலந்திருக்க வேண்டும். உடல் வளர்ச்சிக்கு ஏற்ற உணவு இது. ஒரு மனிதனுக்கு நாள் ஒன்றுக்கு 100 கிராம் புரோட்டீன் தேவை.
2. துளசி இலையை உண்டு வருபவர்கள் வேறு கருத்தடை மாத்திரைகளை பயன்படுத்தத் தேவையில்லை, அன்றாடம் புத்துணர்ச்சியோடு செயல்படுவதற்கும் துளசி இலை பயன்படுகிறது.
3. ஆலம்பாலைத் தடவி வந்தால் கால் வெடிப்புக் குணமாகும்.
4. கரும்பு இலையைச் சுட்டு வெண்ணெயோடு தடவிவந்தால் உதட்டு வெடிப்பு மறையும். உதட்டுப் புண்ணுக்கும் இதுவே மருந்து.

18ம் பக்கத் தொடர்ச்சி......

சூசைக்கு மிகவும் சங்கடமாகி விட்டது.'' தோமஸ் அண்ணு! ஆண்டவர் உயிரோட எழுந்ததைக் கொண்டாடுறது இப்படித்தாஞ? இந்த போத்தல்கள தூக்கி எறிங்க. எவஞவது ஏழைக்கு ஒரு தேரமாவது சாப்பாடு போட்டு, ஒரு துண்டுக் துணியக் கொடுத்தனுப்புங்க! புண்ணியமா இருக்கும். அது தான் ஆண்டவருக்குப் பிடிக்கும்''

தோமஸ் காதுகளைப் பொத்திக் கொண்டார். ''ஐயோ! இவன் தேவ தூஷணம் பேசுருனே!'' பிதாவே இவனை மன்னியும், ஆண்டவர் பட்ட வேதனை இவனுக்கு புரியலேயே. ஆண்டவர் உயிரோட எழுந்த சந்தோஷத்த கொண்டாட மாட்டாஞமே! ஈஸ்டர் அன்னைக்கு கோழிக் கறியும் விறெண்டியும் சாப்பிடாதவன் மனுசஞ? உயிர்த்த இயேசுவே இவனுக்கு நல்ல புத்தியக் கொடு,, தோமஸ் பிதற்றிஞர்.

இனிமேலாவது நான் மனுசஞ கிறிஸ்தவஞ வாழனுமின்ஞ குடியை விடனும். அந்த நல்ல காரியத்த உயிர்த்த இயேசு பேரால இன்னிக்கே ஆரம்பிக்கப் போறேன் இனிமே குடிக்க மாட்டேன்,,

மகளின் கையைப் பிடித்தார் 'ஹெப்பி ஈஸ்டர்' என்று சொல்லிக் கொண்டே வெளியேறிஞர்.

● காந்தாரி


# ஒலி நாடாக்கள் விற்பனைக்கு.....

புதிய கிறிஸ்தவப் பாடல்கள் அடங்கிய ஒலி நாடக்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

- ✱ தவக்கால - புனித வாரப் பாடல்கள்.
- ✱ மாதா பாடல்கள்
- ✱ திருப்பலிப்பாடல்கள்
- ✱ அருங்கொடை இயக்கப் பாடல்கள்
- ✱ பஜனைகள்
- ✱ வானொலி நாடகங்கள்

தொடர்பு;

இயக்குனர்
சமூகத்தொடர்பு நிலையம்
அ. பெ. எண் 44
மட்டக்களப்பு.

Registered as a News Paper in Sri Lanka

# காற்றில் கலந்து வரும்

நாள்: 24 - 3 - 91
நேரம்: மாலை 6-30 மணி.
—குருத்து ஞாயிறு சிறப்பு மலர்—

★

நாள்; 28 - 3 - 91
நேரம்: இரவு 9 . 30 மணி
—புனித வியாழன் சிறப்பு மலர்—

★

நாள்: 29 - 3 - 91
நேரம்: காலை 10 . 30 மணி
—புனித வெள்ளி சிறப்பு மலர்—

★

நாள்: 30 - 3 - 91
நேரம்: காலை 11 . 15 மணி
—புனித சனி சிறப்பு மலர்—

★

நாள்: 31 - 3 - 91
நேரம்: மாலை 8 . 00 மணி
—உயிர்ப்பு விழா மலர்—

★

நாள்: 31 - 3 - 91
நேரம்: இரவு 9 . 30 மணி
—உயிர்ப்பு விழா சிறப்பு மலர்—

நாள்: 2 - 4 - 91
நேரம்: மாலை 6 . 45 மணி
—சிறுவர் உலகம்—

★

நாள்: 6, 7, 8 - 4 - 91
நேரம்: காலை 5 : 50 மணி
—கத்தோலிக்க நற்சிந்தனை—
வழங்குபவர்: அருள்திரு கிங்ஸ்லி றுபேர்ட் அவர்கள்.

★

நாள்: 14 - 4 - 91
நேரம்: மாலை 8 . 30
—புதிய உலகம்—

★

நாள்:- 16 - 4 - 91
நேரம்: மாலை 6 . 45 மணி
—சிறுவர் உலகம்—

★

நாள்: 20, 21, 12 - 4 - 91
நேரம்:- காலை 5 . 50 மணி
—கத்தோலிக்க நற்சிந்தனை—
வழங்குபவர்:- அருள் திரு. அன்னதாஸ் அவர்கள்

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபத்தியார் அச்சகத்தில் அச்சிட்டு தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 25 - 3 - 91ல் வெளியிடப்பட்டது.